நடைபெறும் என்று ஏற்கெனவே தெரிவித்தார்கள். அவையிலும் அதைப்பற்றி தெரிவித்தார்கள். அதனடிப்படையில் இன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அலுவலகத்தில் நடைபெற்றது. அதிலே, பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. அந்த முடிவுகளையெல்லாம் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அறிவிப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், ஓர் உயிர்கூட இழப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சரிலிருந்து, மாண்புமிகு துணை முதலமைச்சரிலிருந்து, மாண்புமிகு அமைச்சர்களிலிருந்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் அர்ப்பணிப்பு உணர்வோடு இதற்காகப் பணியாற்றுவோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களைப் பொறுத்தவரைக்கும், தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு இதுவொரு மிகப் பெரிய நோய். இதை மிகப் பெரிய சவாலாக எடுத்துக்கொண்டு, இந்த நோய்த் தடுப்புப் பணியில் நாங்கள் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நோய் தமிழகத்திலிருந்து முழுமையாக, அறவே ஒழிக்கப்படுகின்ற வரை எங்களுடைய பணி தொடரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, இதற்காக ஒத்துழைப்பு நல்கிய அத்துணை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

6. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள், சொல்லுங்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு அறிவிப்பு குறித்து. சாதிவாரி கணக்கெடுப்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் பின்னர் பார்த்துக்கொள்ளலாம், உட்காருங்கள்.